REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85650

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 4உ செவ்வாய் (20—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 5உ புதன் (21—8—57) [இதழ் 57

தென்னவரை கிஞ்சிற்றும் கவரவில்லை!

புதுடில்லி, ஆக. 15—

டெல்லி சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டம்பற்றி தென்னாட்டு மக்கள்—அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் கிஞ்சிற்றும் அக்கறை செலுத்தவில்லை என்ற தகவல் ஒன்று கிடைத்திருக்கிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் என்ற இந்தப் புத்தக விற்பனையிலிருந்து இந்தத் தகவல் பெறப்பட்டிருக்கிறது; இந்தப் புத்தக விற்பனைபற்றிய விபரங்களை தகவல் ஒலிபரப்பு மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் தெரிவித்திருக்கிறார், மக்கள் சபையில்.

(5-ம் கலம் பார்க்க)

இந்தி ஆட்சிமொழியான இரகசியம்

ஒரு வாக்கு வித்தியாசத்தில்தானே ஆட்சி மொழியாகத் தேர்வுபெற்றது!

இந்திவெறியர்களின் போக்கு நீடித்தால் 'ஆண்டவன்' தான் நாட்டைக் காப்பாற்ற வேண்டிவரும்!

"அரசாங்க மொழிக் கமிஷன் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர், 1965-க்குள் என்ன பாடுபட்டேனும் இந்தியைத் திணித்துவிட வேண்டுமென்றே சிபாரிசு செய்திருக்கின்றனர். இந்தி வழங்காத பகுதி மக்களில் பெரும்பான்மையினரின் கருத்தை, டாக்டர் சுப்பராயன் அவர்களது தனிக் குறிப்பு பிரதிபலிக்கிறது என்றாலும், இந்தி வெறியர்களால் அந்தக் கருத்துக்கு, உரிய முக்கியத்துவம் தரப்படமாட்டாது. சுமார் 48 சதவிகித மக்களே இந்தி பேசுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

"காலஞ்சென்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 'மொழிவழி மாநிலங்கள் பற்றிய சில சிந்தனைகள்' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை இங்கு குறிப்பிடுவது சரியானதே என்று கருதுகிறேன்; அவர் சொல்லுகிறார்:—

"இந்தியாவுக்கான அரசியல் சட்ட நகல் பற்றி விவாதிக்கப்பட்ட போது, இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வது என்ற பிரச்சினையும் காங்கிரசுக் கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது; அப்போது என்ன நிகழ்ந்தது என்பதை நான் இங்கு கூறினால் அது ஒரு இரகசியத்தை வெளிப்படுத்துவதாக அமையாது என்று கருதுகிறேன். இந்த இந்தி பற்றிக் கூறுகிற 115-ம் பிரிவை விட தகராறுக்கான வேறு பிரிவே அரசியல் சட்டத்தில் கிடையாது; வேறெந்தப் பிரிவுக்கும் இதற்குத் தெரிவிக்கப் பட்டதைவிட அதிகமான எதிர்ப்பு தெரிவிக்கப்படவில்லை. நீண்ட விவாதத்திற்குப் பிறகு இந்தப் பிரச்னைமீது ஓட்டெடுக்கப்பட்டது; சாதகமாக 78 ஓட்டுகளும், எதிராக 78 ஓட்டுகளும் பதிவாயின. சிக்கல் மீண்டும் தீர்க்கப்பட முடியாததாயிற்று. நீண்ட நாட்களுக்குப் பிறகு கட்சியில் இது மீண்டும் விவாதிக்கப்பட்ட பிறகு ஓட்டுக்கு விடப்பட்ட போது, எதிராக 77 வாக்குகளும் சாதகமாக 78 வாக்குகளும் பதிவாயின. ஒரே ஒரு ஓட்டு அதிகம் பெற்றுத்தான், இந்தி தேசிய மொழி என்ற இடம் பெற்றது."

"இது, பலரது கண்களையும் திறக்கவேண்டும். சர்க்கார் தங்கள் விருப்பத்தை, சிறுபான்மையினர் மீது இந்தப் போக்கில்தான் பலவந்தமாகத் திணிப்பார்கள் என்றால், எனது பிரார்த்தனை எல்லாம், ஆண்டவன்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும்' என்பதுதான்.

"....இப்போது செய்யக்கூடிய விவேகமான காரியமெல்லாம், சர்க்கார், இந்திக் குழு அறிக்கையைக் கட்டி மூலையில் வைத்துவிட வேண்டியதுதான்; இப்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும் — ஆங்கிலத்திற்குப் பதில் பொது மொழியாக இந்தி தானாக இடம்பெறும் வரையில்!"

—என்று, தோழர் எஸ். செல்லசாமி என்பவர், 'இந்து' 18-8-57-ம் தேதிய சென்னை இதழில் கடிதம் ஒன்று தீட்டியிருக்கிறார்.

ரூ. 17,000 பெறுமான வைரங்கள்

தாமோதர் திட்ட நிறுவனத்தில் திருடுபோயினவாம்!

அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காததற்கு மந்திரி காரணம் கூறுகிறார்

புதுடில்லி, ஆக. 19—

தாமோதர் கணவாய் கார்ப்பொரேஷன் திட்டத்திற்காக வரவழைக்கப்பட்ட பல வைரங்களில், 80 வைரங்கள் காணமற்போய் விட்டனவாம்!

இவை குறித்து மாநிலங்கள் சபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

"2,060 வைரங்கள் வாங்கப்பட்டன என்றும், இவற்றில் 182 காணமற்போய்விட்டதாகவும் கூறப்பட்டன. ஆனால், பின்னர் பார்த்ததில் 80 வைரங்களே காணமற்போயிருப்பதாகத் தெரியவந்தது.

"இவற்றின் விலை ரூ. 17,000 ஆகும். இவற்றைக் கார்ப்பொரேஷனில் வேலை செய்து கொண்டிருந்த அந்நிய நாட்டு, அதிகாரிகள்தான் எடுத்துப் போயிருக்க வேண்டும்; ஆனால் அவர்கள் இப்போது வேலையில் இல்லாததால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியமில்லை"

என்றும் பதிலளித்த மந்திரி படேல் கூறியிருக்கிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

ஆறாவது முறையாக டாக்டர் ஏ. இலட்சுமணசாமி நியமனம்

சென்னை, ஆக. 19—

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்களே சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக மேலும் மூன்றாண்டுக் காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகஸ்டு 21-ந் தேதி முதல் மேலும் மூன்றாண்டுக் காலத்திற்கு அவர் துணைவேந்தராக நியமனமாகியிருக்கிறார்.

70 வயதான டாக்டர் முதலியார் அவர்கள், ஆறாவது முறையாகத் துணைவேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பல்கலைக் கழக செனட் சபையிலிருந்து மூவரின் பெயர், வேந்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டது; இதற்குமுன் நால்வர் இதற்காகப் போட்டியிட்டனர்.

இதில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களுக்கே அதிகமான வாக்குகள் கிடைத்தன; இருந்தாலும், மரபுக்கு ஒப்ப மூவரின் பெயர்கள் வேந்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர், டாக்டர் இலட்சுமணசாமி அவர்களையே தேர்ந்தெடுத்துத் துணைவேந்தராக நியமனம் செய்துள்ளார்.

'பங்கீடு முறை பற்றிய பேச்சுக்கே இடமில்லை'

புதுடில்லி, ஆக. 18—

"ஒவ்வொரு குடும்பமும் தம் உணவுத் தானியத் தேவைகளை நியாய விலைக் கடைகள் மூலம் பெறுவதற்கு அடையாள 'கார்டு'கள் வழங்குவதைக் கொண்டு, நாட்டில் உணவுப் பங்கீடு முறையை ஏற்படுத்துவதாகக் கொள்ள முடியாது; பங்கீடு முறை பற்றிய பேச்சுக்கே இடமில்லை,"

என்று, நேரு பண்டிதர், மக்கள் சபையில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

ஜெருசலம் அருகில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு

ஐ. நா.-விடம் ஜோர்தான் முறையீடு

அம்மான், ஆக. 19—

ஜெருசலம் பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதாகவும், இது பற்றி ஐ. நா. விவாதிக்கவேண்டுமென்றும் ஐ. நா. பாதுகாப்பு நிறுவனத்திற்கு ஜோர்தான் முறையிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

பண்டா-தமிழரசுக் கட்சி ஒப்பந்தம்

முன்னைய ஆளும்கட்சி கண்டனம்

கிளர்ச்சி நடத்தப்போவதாக மிரட்டல்

கொழும்பு, ஆக. 19—

பிரதமர் பண்டா, தமிழரசுக் கட்சியினருடன் அண்மையில் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென்றும், இன்றேல், தாங்கள் ஒரு 'சத்தியாக்கிரகப் போராட்ட'த்தை ஆரம்பிக்கப் போவதாகவும் முன்னைய ஆளும் கட்சியினரான ஐக்கிய தேசியக் கட்சியினர் மிரட்டியிருப்பதாகத் தெரிகிறது.

கட்சியின் பொதுச்செயலாளரான ஜே. ஆர். ஜெயவர்த்தனே என்பார், ஒப்பந்தத்தை சர்க்கார் கைவிடாவிடின் தானே தலைமை ஏற்று போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறாராம்.

முன்னாள் பிரதமரும், தேசியக் கட்சியின் தலைவருமான டட்லி சேனநாயகாவும், பண்டாவின் ஒப்பந்தத்தைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்.

பெரிய போர் மூளும்!

கெய்ரோ, ஆக. 20—

'ஏமானில் பிரிட்டன் உடனடியாக ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் இப்போதைய போர் ஒரு பெரிய போராகிவிடும்' என்று ஏமன் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் தடையுத்தரவு

சேலம், ஆக. 18—

சேலம் நகரில் போலீசாரின் அனுமதியின்றி ஊர்வலங்கள் கூட்டங்கள் நடத்தக் கூடாதென போலீஸ் சட்டம் 30-வது பிரிவின் கீழ் ஒரு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ந—நி.)

1,55,000 பேர் வேலைநிறுத்தம்

டாக்கா, ஆக. 19—

பாகிஸ்தான் மத்திய அரசாங்க ஊழியர்கள் 1,55,000 பேர் அக்டோபர் 10-ம் நாள் இரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

பாகிஸ்தான் அரசாங்கம் தங்கள் கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஐ. நா.-வில் அங்கேரி!

நியூயார்க், ஆக. 20—

அங்கேரி நிலைமை பற்றி ஆராய்ந்து ஐவர் கொடுத்துள்ள அறிக்கையை ஐ. நா. பொதுச் சபை செப். 10-ம் நாள் விவாதிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டனராம்!

பீகிங், ஆக. 20—

சென்ற திங்களில் கம்யூனிஸ்டுக் காரியாலயத்தை தாக்கினராம்—ஒரு பாங்கியைக் கொள்ளையடிக்க முயன்றனராம்—சீன அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்தவர்கள்!

அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது; 4 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மலைக் குன்றுகளில் மறைந்து வாழ்ந்த 15 பேர் பிடிபட்டு வழக்குத் தொடரப்பட்டு, விசாரணை நடந்துவருகிறதாம்.

உ. பி. மாநிலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்படுமா?

மாநிலங்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, ஆக. 20—

"உத்தரப் பிரதேச இலட்சுமணபுரியில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது என்ற யோசனையை சர்க்கார் பரிசீலிக்குமா?"

இப்படி ஒரு கேள்வி மாநிலங்கள் சபையில் எழுந்தபோது, மந்திரிகள் எவரும் பதிலளித்ததாகத் தெரியவில்லை.

கேள்வியைக் கேட்டவர் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாயிருந்த பி. என். சாப்ரு என்ற காங்கிரஸ் உறுப்பினர் தான்.

கேரளத்தைச் சேர்ந்த ஏ. வி. குனிஹம்பு என்ற உறுப்பினர், 'மாநில புது அமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி, தென்னாட்டில், ஒரு இந்தி பல்கலைக் கழகம் நிறுவுவது பற்றி சர்க்காரிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?' என்று ஒரு கேள்வி கேட்டதைத் தொடர்ந்தே தமிழ்ப் பல்கலைக் கழகம்பற்றிய கேள்வியும் எழுந்திருக்கிறது.

தென்னவரை கவரவில்லை!

(மேல் கட்டத்தின் தொடர்ச்சி)

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் என்ற புத்தகம் ஒன்றை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும்—ஒவ்வொன்றிலும் 50 ஆயிரம் பிரதிகள் அச்சடித்தனராம்!

இதில் 17,746 கன்னட பிரதிகளும், 15,356 தெலுங்குப் புத்தகங்களும், 7,331 தமிழ்ப் பிரதிகளும், 2,345 மலையாளப் பிரதிகளும் மட்டுமே விற்பனையாயினவாம்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—8—57 செவ்வாய்

'கைப்பான படிப்பினை'

சென்னை நகராட்சி மன்றம் மேற்கொள்ளும் சேரி சீர்திருத்தப் பணிகளை, பிரச்சார திரைப் படங்களாக எடுக்கவேண்டும் என்ற கருத்தை அல்லது ஆணையை' அறிவித்தவர் நகராட்சிமன்ற காங்கிரசுக் கட்சித் தலைவராகவும், வரி-நிதிக் குழுவின் தலைவராகவும் இருந்து வரும் இராதாகிருஷ்ணனார் அவர்கள்தான் என்பது, நகரசபை உறுப்பினர் வி. முனுசாமி அவர்களின் குற்றச்சாட்டிலிருந்து மிகமிகத் தெளிவாகத் தெரியவருகிறது. அதே குற்றச்சாட்டை வலியுறுத்தும் வகையில், நகராட்சிமன்ற ஆட்சியாளர் கூறிய பதிலும் அமைந்திருக்கின்றது.

நகராட்சிமன்ற உறுப்பினரும், ஆணையாளரும் குறிப்பிட்டுள்ளது ஒருபக்கம் இருக்க, அதற்கு விளக்கமளித்துள்ள தலைவர் இராதாகிருஷ்ணனாரும், தம்மீது சாட்டப்படும் குற்றத்தை மறுத்துக் கூறாது மழுப்பிப் பேசியிருப்பதின் மூலம், தமது குற்றத்தைத் தாமே ஒப்புக்கொண்டவராகின்றார்.

வரி-நிதிக்குழு தலைவர் இராதாகிருஷ்ணனார் அவர்கள் பிறப்பித்த கட்டளையை ஆதாரமாகக் கொண்டே, தாம் தவறாகச் செயலாற்றியிருப்பதாக ஆணையாளர் குறிப்பிட்டுள்ளதைக் கொண்டு, நிகழ்ந்துள்ள குற்றத்திற்கு முழுதும் பொறுப்பேற்க வேண்டியவர் இராதாகிருஷ்ணனாரேயாகும் என எவரும் முடிவு கட்டிக்கொள்ளலாம். அவ்வாறு முடிவுகட்டிக் கொள்ளுவதில் தவறுமில்லை. அதுதான் மறுக்க முடியாத உண்மையாகும். நிற்க.

மேற்படி திரைப் படப்பிடிப்பின் காரணமாக இதுவரை ஏறத்தாழ பத்தாயிரம் ரூபாய் வரை செலவழிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று, தவறை அம்பலத்திற்குக் கொண்டுவந்த உறுப்பினர் தமது பேச்சில் சுட்டிக்காட்டியுள்ளார். உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளதை விடச் செலவாகியுள்ள தொகை கூடுதலாக இருந்தாலும் இருக்கக்கூடும். பணத்தின் அளவு கூடுதலாக இருந்தாலும் குறைவானதாக இருந்தாலும், பொதுமக்களிடமிருந்து கசக்கிப் பிழிந்து வசூலிக்கப்பட்ட வரிப் பணம், வரி-நிதி நிரந்தரக் குழுத் தலைவர் இராதாகிருஷ்ணனார் அவர்களின், சட்டத்தை மீறிய தான்தோன்றித்தனத்தால் பாழாக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

விஷயத்தை அம்பலத்திற்குக் கொண்டுவந்தநகரசபை உறுப்பினர், மற்றொரு உண்மையையும் தமது பேச்சின் மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றார். அதாவது, துவக்க முதலே ஆணையாளர் கீழ் பணிபுரிந்துவரும் ஊழியர்கள் ஆணையாளருக்குத் தவறாக வழிகாட்டி வந்திருக்கின்றார்கள் என்று அவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார். இத்தகவல், மேற்படி விவகாரம் பற்றி உள்ள தகவல் கட்டுகளில் இருந்து தெரியவருகிறது என்றும் அவ்வுறுப்பினர் ஆதாரம் காட்டியுள்ளார்.

இதிலிருந்து தெரிவதென்ன? ஆணையாளர் தவறாக நடந்து கொண்டுள்ளதற்கும், மோசம் போனேன் எனக் குமுறுவதற்கும், வரி—நிதி நிரந்தரக் குழு தலைவரின் எழுத்துமூல கட்டளை மட்டும் அல்லாது, ஆணையாளருக்குத் தவறாக வழிகாட்டிவந்துள்ள அவர்கீழ் பணிபுரியும் ஊழியர்களின் பொறுப்பற்ற செயலும் காரணமாகும் என்று ஏற்படுகிறது. எனவே, நிகழ்ந்துள்ள தவறுக்கு இராதாகிருஷ்ணனாருடன், ஆணையாளர் கீழ் பணிபுரிந்துவரும் ஊழியர்களில் சிலரும் பொறுப்பாளிகள் ஆவர் என்பது விளக்கமாகிறது.

திரைப்படமாக்க ஒப்புக்கொண்ட திரைப்பட நிறுவனத்திற்கும் ஆணையாளருக்கும் நேரடி தொடர்பு இருக்கவேண்டியதுதான் நியாயமானதாகும். ஆனால், ஆணையாளருக்கும் திரைப்பட நிறுவனத்திற்கும் நேரடி தொடர்பே இல்லாமல் இருக்கின்றது. அதற்கு மாறாக, வரி-நிதி நிரந்தரக் குழு தலைவர் இராதாகிருஷ்ணனார் அவர்களுக்கும் — திரைப்பட நிறுவனத்திற்கு மட்டுமே நேரடிதொடர்புஇருந்திருக்கின்றது என்ற உண்மையை ஆணையாளரே அறிவித்திருக்கின்றார்.

வரி-நிதி நிரந்தரக் குழு தலைவராக உள்ளவர் இராதாகிருஷ்ணனார். தம்மைத் தலைவராகக் கொண்டுள்ள குழுவின் ஒப்புதல் பெற்றுத்தான், எந்தச் சிறு செயலும் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவர் அறியாதிருப்பது நியாயமில்லை. அதுபோன்றே நகராட்சிமன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகுதான், ஆணையாளர் எந்தப் பொறுப்பையும் நிறைவேற்றிவைக்க முன்வரவேண்டும் என்பதையும், நிதி - நிரந்தரக் குழுத் தலைவர் தெரிந்தே இருக்கின்றார். அதுவுமன்றி, எந்த ஒரு பணியை மேற்கொள்ளுவதாக இருந்தாலும் முன்கூட்டியே ஒப்பந்தப்புள்ளி கோரி, குறைந்த ஒப்பந்தபுள்ளி தருகிறவரிடம் எந்தப் பணியையும் ஒப்படைக்க வேண்டும் என்ற ஏற்பாட்டையும், நிதிக்குழுத் தலைவர் தெரிந்தவரே யாவர்.

இவை அனைத்தும் தெளிவாகத் தெரிந்தவராக இராதாகிருஷ்ணனார் அவர்கள் இருந்தும்கூட, எதேச்சாதிகாரமாக நடந்துகொள்ள அவர் முனைந்திருக்கின்றார். அதே நேரத்தில் பொறுப்புள்ள ஆணையாளரையும் தவறு செய்ய, அவர் தமது அறிவிப்பின் மூலம் தூண்டி இருக்கின்றார்.

ஆணையாளர் தமது தவறுக்காக, நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு வெளிப்படையாக வருத்தம் தெரிவித்திருக்கின்றார். ஆனால், பெருந்தவறு செய்துவிட்டவரும், ஆணையாளரைத் தவறு செய்ய ஊக்கிய வருமான, வரி—நிதி நிரந்தரக் குழுவின் தலைவரான இராதாகிருஷ்ணனாரே, சபைக்கு வருத்தம் தெரிவிக்க முன்வரவில்லை. அவர் தந்த விளக்கத்தில், கழுவாய் தேடும் தன்மையே இடம் பெற்று இருக்கவில்லை. அதற்கு மாறாக எதேச்சாதிகாரியின் அகந்தை நிலை கோரநடம்புரியக் காண்கின்றோம்.

இத்திரைப் படப்பிடிப்பு விவகாரத்தில் நகராட்சிமன்ற விவாதத்தின்மூலம் வெளியாகியுள்ள உண்மை ஒரு சிறு பகுதியேயாகும். முழு உண்மை, நடைபெற்றுள்ள விவாதத்தின்மூலம் வெளியாகி இருப்பதாகச்சொல்வதற்கில்லை. பொதுமக்கள் வரிப் பணம் பாழாக்கப்பட்டிருக்கும் விவகாரத்தில் பொதிந்துள்ள உண்மை முழுதும் பொதுமக்களுக்குத் தரப்பட்டாகவேண்டும். அத்துடன் இனி இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்காகவும் ஒரு எச்சரிக்கையாக, இதுபற்றி விரிவான ஆராய்ச்சி நடத்த சென்னை அரசாங்கம் முன்வரவேண்டும். முன்வரும் என்றே நம்புகின்றோம்.

இந்தச் சம்பவத்திலிருந்து பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய படிப்பினை ஒன்று இருக்கின்றது. அதாவது, அதிகாரிகள் எவ்வளவு நேர்மையானவர்களாகவும் திறமையானவர்களாகவும் இருந்தாலும், எதேச்சாதிகாரமாக நடந்துகொள்ளப் பழகிவிட்ட காங்கிரசுத் தலைவர்களிடம் சிக்கிக்கொண்டால், அவர்கள் படும்பாடு எத்தகையதாக இருக்கக்கூடும் என்பதற்கு ஆணையாளர்அவர்களின் சம்பவம்ஒன்றே போதுமானதாகும். இதை ஒரு படிப்பினையாக, அதிலும் தாம் பெற்ற படிப்பினையை,தம் வாயாலேயே ஆணையாளர் ஒப்புக்கொண்டுள்ளதுபோல, 'கைப்பான படிப்பினை'யாக, மற்ற அரசாங்க அதிகாரிகள் கற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.

'இலங்கையால் இடையூறு உண்டா?'

சேது சமுத்திரத் திட்டம்பற்றி மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 18—

சேது சமுத்திரம் திட்டத்தை நிறைவேற்ற கடலில் எவ்வளவு ஆழம் தோண்ட நேரிடும்; திட்டம் நிறைவேறினால் இவ்வழியே எத்தனைக் கப்பல்கள் செல்லமுடியும் என்பனபற்றி ஆராய இரு 'சர்வே'க்கள் நடத்தப்படும் என்று மக்கள்சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

'இத்திட்டத்தைநிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் ஏதேனும் இடையூறு விளைவிக்கிறதா?' என்று எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு அமைச்சர் பதிலளிக்கையில், 'அப்படியொன்றும் இடையூறு விளைவிப்பதாகத் தெரியவில்லை' என்று பதில் தரப்பட்டிருக்கிறது.

மதுரைக்கு விமானப் போக்கு வரத்து

இப்பொழுது இல்லையாம்!

புதுடில்லி, ஆக. 18—

"மதுரைக்கு மீண்டும் விமானப் போக்குவரத்து துவக்கப்படுமா?" என்று மக்கள் சபையில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் உமாயூன் கபீர், முக்கிய விமான வழிகளில் 'வைக்கவுண்ட' விமானங்களைவிடத் தொடங்கிய பின்னர், விமான வழிகளை மாற்றியமைப்பதுபற்றி 'இந்திய விமானக் கார்ப்பொரேஷன்' ஆராயும் என்றும், அப்போது மதுரைக்கு விமானப் போக்குவரத்து ஏற்படுத்துவது குறித்தும் ஆராயப்படுமென்றும் கூறியிருக்கிறார்.

இத்தகைய விமானப் போக்குவரத்து ஏற்படுத்துவதில் மாநில அரசாங்கம் உதவிசெய்ய முடியுமா என்று சென்னை முதலமைச்சரையும் கேட்கப்பட்டிருக்கிறதாம்!

'சட்டங்களை இயற்றுவதில் நிதானம் வேண்டும்'

'அளவுமீறிய அவசரம்காட்டுவது ஆபத்தானது'

'சுதந்திரத்திற்குப்பின் சட்டங்கள் எண்ணிக்கை அளவுமீறிப்போகிறது'

'சமூகக் கேடுகளை சட்டங்களால் மட்டும் அகற்றிவிட முடியாது'

உயர் நீதிமன்ற நீதிபதி பி. என். இராமசாமி கருத்து

சென்னை, ஆக. 17—

"ஒரு குறிப்பிட்ட சட்டம் தேவை என்று ஒரு மந்திரி திங்கட்கிழமையன்று நினைக்கிறார்; உடனே செவ்வாய்க்கிழமையன்று அது முடிவு செய்யப்பட்டு விடுகிறது; புதன்கிழமையன்று சட்டசபைக்கு வந்து விடுகிறது; வியாழனன்று, அது இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டு விடுகிறது; வெள்ளிக்கிழமையன்று அது கட்டமாக அமுலாகத் தொடங்குகிறது; ஆனால் அடுத்த திங்கட்கிழமையன்று அந்தச் சட்டத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கலாகிறது"

—என்று, சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் சட்டசபைகளில் அவசர அவசரமாகப் புகுத்தப்படும் சட்டங்கள் குறித்து உயர் நீதிமன்ற நீதிபதி பி.என். இராமசாமி அவர்கள் கருத்தறிவித்திருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஒரு குறிப்பிட்ட சட்டம் அமுலில் இருக்கிறது என்ற விஷயத்தை, பப்ளிக் பிராசிக்யூட்டர், மற்றும் நீதிபதிகளே அறிந்துகொள்ளமுடியாத வண்ணம் எண்ணற்ற சட்டங்கள் இன்று நிறைவேற்றப்படுகின்றன. இந்தச் சட்டங்களை மையமாகக் கொண்ட மனுக்கள் வரும்போது, நாங்கள் ரெவினியூ போர்டையோ, இதர அலுவலகங்களையோ கலந்தாலோசிக்க நேரிடுகிறது.

"நம்மில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால், அதைச் செய்யுமுன், நாம் ஏதாவது ஒரு சட்டப் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் எதையும் செய்கின்றோமோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது; அந்த அளவுக்கு சட்டங்கள் வளர்கின்றன.

"சமூகவிரோத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கென எண்ணற்ற சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்பீல் வழக்குகளில் பெரும்பாலானவை, மதுவிலக்குச் சட்டம், விபசார ஒழிப்புச் சட்டம், சூதாட்டச் சட்டம்—குறிப்பாக பருத்திச் சூதாட்டம் பற்றிய சட்டம், இவை பற்றியவைதாம்.

"இந்தத் தீமைகள் அனைத்தும் மனித சுபாவத்தில் இரண்டறக் கலந்திருப்பவை; இவை தொன்று தொட்டு இருந்துவருபவை; இவற்றை, சர்க்கார் சட்டங்கள் மூலம் ஒழித்துவிடக் கருதுகின்றது.

"ஆனால், இத்தகு சட்டங்கள் மூலம் இலஞ்சப்பழக்கம்தான் அதிகரிக்கிறது; சட்டத்தை மதியாத குண்டர்கள் அதிகரிக்கின்றனர்; இந்தச் சட்டங்கள் மிகுந்த சிரமம் இன்றி அமுலாக்கப்படக் கூடியவையாயிருக்க வேண்டும்.

"இதுபோன்ற குற்றங்களை இரண்டாம் முறையாகப்புரிகின்றவர்களுக்குத் தண்டனைகளை அதிகரிப்பது என்ற போக்கில் சட்டசபைகள் செல்கின்றன. நவீன காலத்தில் குற்றச் சட்டங்கள் இயற்றும் முறையில் இந்தப் போக்கு கவலையுடன் கண்காணிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

"மேலும், நவீனகாலச் சட்டங்கள், உள்ளடக்கம் பற்றிக் கவலைப் படாமல் சம்பிரதாயங்களைப் பற்றியே அதிகம் வற்புறுத்துகின்றன."

அரிசி வாங்குவதற்கு அடையாள அட்டையாம்

நியாயவிலை கடைகளின் ஊழல்களை ஒழித்துவிட முடியுமாம்!

புதுடில்லி, ஆக. 18—

முக்கிய நகரங்களில் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் உணவுத் தானியங்களை விற்பனை செய்வது குறித்து மாநில அரசாங்கங்களுடன் மத்தியப் போராசு கடிதப் போக்குவரத்து நடத்திவருகிறதாம்!

இந்தத் தகவலை, மத்திய உணவுத் துறைத் துணையமைச்சர் திரு. ஏ. எம். தாமஸ் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

"மத்திய அரசுடன் கலந்து பேசி, பீகார் அரசாங்கம் குடும்ப அடையாள அட்டைகள் வழங்க முன்வந்துள்ளது; ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தானியம் கொடுக்க நிர்ணயிக்கப்படும். அதை நியாய விலைக் கடைகள் மூலம் மக்கள் வாங்கிக்கொள்ளலாம்" என்று அவர் மேலும் கூறினார்.

அடையாள கார்டுகள் மூலம் நியாய விலைக் கடைகளில் நடக்கும் ஊழல்களை ஒழித்துக்கட்ட முடியும் என்று அரசாங்கம் நம்புகிறதாம்!

ஏராளமானவர்கள் தற்காலிக ஊழியர்கள்?

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை பற்றி தகவல்

புதுடில்லி, ஆக. 18—

மக்கள் சபையில், பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை ஊழியர்கள் பற்றி எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு, இரயில்வே துணை அமைச்சர் ஷாநாஸ்கான் பதிலளிக்கையில், 'பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையில் தற்காலிக ஊழியர்களாகவோ, நாட் கூலி ஊழியர்களாகவோ ஏராளமானவர்கள் அமர்த்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையில்லை' என்றார்.

இரயில்வே ஊழியர்கள் மூன்றாண்டு வேலை செய்தால் அவர்கள் நிரந்தர ஊழியர்களாக்கப்பட வேண்டும் என்ற விதி இத்தொழிற்சாலை சம்பந்தப்பட்டவரை கிடையாது என்றும், இத்தொழிற்சாலை அண்மையில்தான் துவக்கப்பட்டு ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் இல்லையாம்!

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டமெதுவும் இல்லையென்று அமைச்சர் நவாஸ்கான் மக்கள் சபையில் தெரிவித்தார்.

இத்தொழிற்சாலையில், 1956-57-ல் 88 இரயில் பெட்டிகள் செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இத்தொழிற்சாலையில் இரண்டாவது 'ஷிப்டு' துவக்குவது பற்றிய யோசனை பரிசீலனையில் இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

‘அன்று தூவிய விதை இன்று செழித்துப் படர்ந்துவிட்டது’

‘தீரமிக்க உள்ளங் கொண்டவர்களின் இருப்பிடமாக தி. மு. க. விளங்குகிறது’

அண்ணா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் விவரம்

தாரமங்கலம், ஆக. 16—

“ஊராட்சி மன்றங்களில்தான் உண்மையான ஆட்சிப் பொறுப்பேற்கும் பயிற்சியையும், மக்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் பெற முடியும் என்பது எல்லோரும் அறிந்தது. அந்த முறையில் இன்று ஊராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் விரிவாக்கப்பட வேண்டும்,” என்று, தாரமங்கலம் ஊராட்சி மன்றத்தின் மின்விசைச் சங்கினை முதன்முதலாக ஒலிக்கச் செய்தபோது அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தாரமங்கலம் ஊராட்சி மன்றத்தினர் புதிதாக அமைத்திருக்கும் மின்விசை ஊதுசங்கினை ஒலித்துத் துவக்கி வைக்கும் விழா 9—8—57 காலை 10 மணிக்கு ஊராட்சி மன்றத்தின் எதிரில் எழிலோடு அமைக்கப்பெற்றிருந்த பந்தலில் நடைபெற்றது.

விழாவுக்குச் சேலம் பி. இரத்தினசாமி அவர்கள் தலைமை தாங்கினார்; அவர் தமது தலைமை உரையில் அண்ணாவின் சேவைகளைப் பாராட்டினார்,

பின்னர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் அண்ணாவின் படத்தைத் திறந்துவைத்து, உடல்நிலை சரியில்லாமலிருந்தும் சற்று நேரம் பேசினார்; அவர் பேசியபோது ‘அண்ணாவின் படத்தைத் திறந்துவைப்பது என்னுடைய பாக்கியம் என்று சொல்லமாட்டேன்; அது என்னுடைய கடமை’ என்றுகூறி அண்ணாவின் பல சிறப்பியல்புகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

பின்னர் சேலம் க. இராசாராம் அவர்கள், விழாவில் பங்கு பெற்றதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்து, அண்ணாவையும் அவர் படத்தைத் திறந்து வைத்த தாரமங்கலம் ஊராட்சி மன்றத்தையும் பாராட்டிப் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் ஊராட்சி மன்றங்களின் பணியைப் பற்றிக் குறிப்பிட்டு அவற்றின் தேவையை ஆட்சியாளர்களும் மக்களும் உணரவேண்டும் என்றார்; மின்விசைச் சங்கைத் துவக்கும் நேரத்தில் மின்சாரத்தைப் பற்றிய சில எண்ணங்களை நினைவுகூர்வது நல்லது என்றார்.

ரஷ்ய நாட்டில் லெனின் சாகின்ற நேரத்தில், ‘தலைவரே, உங்களுக்குப் பின் ரஷ்யாவுக்கு யார் துணை?’ என்று கேட்டவர்களுக்கு, ‘மின்சாரம்; மின்சாரம்’ என்று சொல்லி மின்சாரத்தின் பயனை உணர்த்தியதை எடுத்துக் காட்டினார்.

பின்னர், மன்ற அலுவலகத்தின் ஒரு பகுதியில் இருந்த அந்த சங்கின் விசையை அழுத்தி சங்கொலியை முழக்கினார்.

விழாவுக்குக் காஞ்சி நகர மன்றத் துணைத் தலைவர் அ. க. தங்கவேலர், மா. கி. தசரதன், பஞ்சாட்சாரம், சேலம் தி. மு. கழகச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன், ப. கண்ணன் ஆகியோர் வந்திருந்தனர்.

நன்றி நவின்ற பின் கூட்டம் முடிந்தது.

தி.மு.க. பொதுக்கூட்டம்

அன்று மாலை 6 மணிக்கு, தோழர் தா. வையாபுரி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் ப. கண்ணன் அவர்கள் கழகத்தின் கொள்கைகளை விளக்கி, கழகம் வளர்ச்சியடைய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

அடுத்துப் பேசிய தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் கழக வீரர்கள் சட்ட மன்றத்தில் ஆற்றும் பணியின் சிறப்பை எடுத்துச் சொன்னார்.

பின்னர், காஞ்சி நகர மன்றத் துணைத் தலைவர் திரு. அ. க. தங்கவேலர், திராவிடம் பிரிந்தால் மட்டுமே தென்னகத்திற்கு நல்வாழ்வு கிடைக்கும் என்பதை எடுத்துச் சொன்னார்.

இறுதியாக அண்ணா அவர்கள் கழகத்தின் கொள்கைகள் மக்களை ஈர்க்கின்ற அளவுக்கு ஆற்றலும் உயிரூட்டமும் உள்ளவையாக இருப்பதால் தமிழகமெங்கும் பரவி இருக்கும் கழகத்தின் செல்வாக்கினை விளக்கி, கழகம் சட்ட மன்றத்தின் உள்ளே போனதால் உண்டான பலன்—இதுவரை கண்டும் காணாதவர்கள்போல் இருந்தவர்களையும் காண்பதோடு மட்டும் இல்லாமல், கண்டதை எடுத்துச் சொல்லவும் வைக்கின்றது என்பதையும், வடநாடு எல்லாத் துறையிலும் தென்னாட்டை அடிமைகொண்டிருப்பதை விளக்கியும் பேசினார்.

நன்றி நவின்ற பின் கூட்டம் முடிவுற்றது.

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரை மணிவிழாவுக்குத் தாரமங்கலம் தி. மு. கழகத்தின் அன்பளிப்பு ரூ. 26—8—0 அண்ணாவிடம் அளிக்கப்பட்டது.

★

மதுரை:

சிறப்புச் சொற்பொழிவு

“1967-ல் என்ன நடக்கும்—என்ன நிலைமை இருக்கும் என்பதை எண்ணிப் பார்ப்பதற்கு முன் என் மனம் 1917-ம் ஆண்டைப் பற்றி நினைக்கின்றது. அந்த ஆண்டு என் கவனத்திற்கு வரும்போதெல்லாம் அன்றையத்தினம் தமிழகத்திலே இருந்த அரசியல் நிலைமைகளையும், அதில் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்த டாக்டர் நாயரையும் நான் மறப்பதற்கில்லை.” என்று 11-8-57 காலை பழனி டாக்கீசில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் அண்ணா குறிப்பிட்டார்.

பழனி திரையரங்கில் நிரம்பி நின்ற மக்களிடையே அண்ணா அவர்கள் ‘1917 முதல் 1957’ வரை நடந்த பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகளை விவரித்து, இவை எப்படி 1967-ம் ஆண்டில் பயன் அளிக்கும் விதத்தில் மாறப் போகின்றன என்பதை விளக்கிப் பேசினார்.

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் சிறப்புக் கூட்டத்தைப் பற்றி விளக்கி, வழக்கறிஞர் தோழர் பார்த்தசாரதி (நாயுடு) அவர்களைத் தலைமைதாங்கி நடத்தித் தருமாறு வேண்டிக்கொண்டார்.

தலைவர் தம்முடைய முன்னுரையில் அந்த நாட்களில் நீதிக் கட்சி ஆற்றிவந்த அருந் தொண்டுகளை விளக்கி, அந்த நீதிக் கட்சியில் இருந்த முற்போக்கான எண்ணங்களை இன்று தி. மு. கழகம் ஆற்றிவருவதில் தமக்கிருக்கும் மகிழ்ச்சியை எடுத்துச் சொல்லி, அண்ணாவையும் அவருடைய பல சிறப்புக்களையும் பாராட்டிப் பேசினார்.

பின்னர் அண்ணா பலத்த கரவொலிகளுக்கிடையே எழுந்து டாக்டர் நாயர் தூவிய கருத்துவிதை எவ்வாறு இன்றையத்தினம் செழித்து படர்ந்திருக்கிறது என்பதனைப் பற்றியும், நீதிக்கட்சி பல நல்ல கோட்பாடுகளைப் பெற்றிருந்தும் பங்களாக்களில் சென்று முடங்கியதால் செயலற்றுப் போனதையும், அதனை மீண்டும் செயலுள்ளதாக்க, பங்களாக்களிலிருந்து அதைப் பரந்தவெளிக்கு அழைத்துவந்த முயற்சியையும், அந்த முயற்சி வெற்றி பெற்று இன்று தென்னகத்தின் மக்கள் சக்தியாக—சனநாயக இயக்கமாக—விடுதலைப் படையாகத் தீரமிக்க உள்ளங்கொண்டவர்களின் இருப்பிடமாக—தி. மு. கழகமாக விளங்குவதனைப் பற்றியும் விளக்கிப் பேசினார்.

இறுதியில் தோழர் முத்து அவர்களின் நன்றியுரைக்குப் பின்னர் கூட்டம் முடிவுற்றது.

நண்பகல், வழக்கறிஞர் பார்த்தசாரதி(நாயுடு) அவர்கள் விருந்து அளித்து நமது இயக்கத்தவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

தேநீர் விருந்து

தேர்தலில் அண்ணா பெற்ற வெற்றியைப் பாராட்டுவதற்காக 11—8—57 மாலை 5 மணிக்கு மதுரை நகரில் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள் அண்ணாவுக்கு ஒரு தேநீர் விருந்தளித்தனர்.

விருந்திற்குப் பின்னர் திரு. கருமுத்து சுந்தரம் (செட்டியார்) அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையில் அண்ணாவின் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

டாக்டர் அருணாசலம் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார்.

பின்னர் கணக்காயர் நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் அண்ணாவின் தமிழார்வத்தையும், தமிழ் மக்களுக்கு அவர் செய்துவரும் சேவையையும் பாராட்டிப் பேசும்போது,

“தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் இயன்ற வகையிலே எல்லாம் தொண்டு செய்கின்றவன்தான் உண்மையான தமிழ் மகன். அவனுக்கு இதைத் தவிர வேறு என்ன பணி மேன்மையானதாக இருக்கமுடியும்?” என்று கேட்டார்கள்.

பின்னர் விருதுநகர் தோழர் வி. வி. இராமசாமி அவர்கள், ‘திராவிடநாடு கிடைக்கும் நாள் அண்மையிலேயே இருக்கிறது’ என்று கூறி தி. மு. கழகத்தையும், அண்ணாவையும் பாராட்டினார்.

பின்னர் திரு. அரங்கசாமி (நாயுடு) அவர்கள் அண்ணாவின் சொல்லாற்றலையும், அரசியல் நுட்பத்தையும் பாராட்டினார்.

அடுத்து தோழர் சந்தோஷம் அவர்களும், தோழர் கே. பழனியப்பன் அவர்களும் பேசினர்.

டாக்டர் இராசமாணிக்கம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“அண்ணா அவர்களை நான் நீண்டகாலமாக அறிவேன். தமிழகத்திற்கு அவர்கள் நல்ல தொண்டு செய்கின்றார்கள். இன்று பிள்ளைகள் எல்லாம் நன்றாகப் பேசுகின்றார்கள்—எழுதுகின்றார்கள் என்றால், அதற்கு அண்ணாவின் தொண்டுதான் காரணம்.”

இறுதியாக அண்ணா அவர்கள் தமக்களிக்கப்பட்ட விருந்துக்கு நன்றி தெரிவித்துவிட்டு, டாக்டர் நாவலர் பாரதியார் அவர்கள் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு உழைத்ததுதான் பலருக்கு—அரசியல் துறையில் இருந்தோருக்குக்கூட—தமிழார்வம் வரச் செய்தது என்றும், தி.மு.கழகத்தின் கொள்கைகளைப் பற்றி விளக்கியும் அரிய உரை ஒன்று நிகழ்த்தினார்.

மதுரை லட்சுமிகாந்தம் அம்மையார் எம். எல். ஏ., மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து, திருச்சி வானமாமலை, மா. கி. தசரதன், பஞ்சாட்சரம் ஆகியோர் விருந்தில் கலந்து கொண்டனர்.

பொதுக்கூட்டம்

அன்று மாலை 6-மணிக்கு மதுரை நகரம் என்றுமே கண்டிராத அளவில் திலகர் திடலில் மக்கள் வெள்ளம் கூடியிருந்தது; தேர்தலுக்குப்பின் முதன்முறையாக மதுரைக்கு அண்ணா வரும் நிகழ்ச்சி அது.

அவ்வளவு பெரியகூட்டம் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது அண்ணா அவர்களின் பேருரையை! ஆனால், அவர்கள் எதிர்பாராதவகையில் வானம் கருத்து குளிர்காற்று வீசத் தொடங்கியது.

தோழர் எஸ். முத்து அவர்கள் அண்ணா அவர்களை வரவேற்றுப் பேசி டாக்டர் அருணாசலம் அவர்களைத் தலைமை தாங்கி கூட்டத்தை நடத்தித் தருமாறு முன்மொழிந்தார்.

வழக்கறிஞர் பார்த்தசாரதி (நாயுடு) அவர்கள் வழிமொழிந்தார்.

தலைவர் சிறிதுநேரம் பேசி அண்ணா அவர்களைப் பேசுமாறு அழைத்தார்.

வீசிக் கொண்டிருந்த ஊதைக் காற்றில், கூடியிருந்த மக்கள் வெள்ளத்தின் பேரொலிக்கிடையில் அண்ணா பேச எழுந்தார்.

பல அமைப்புக்களின் சார்பிலும், தனிப்பட்டவர்கள் சார்பிலும் ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அண்ணாவுக்கு அணிவிக்கப் பெற்றன.

இதற்குள் வானமும் தூற்றலைத் தெளித்துக் கொண்டிருந்தது; ‘தூற்றல் பெருமழையானால் காணாகக் கூட்டத்தை முடித்து விடுவேன்’ என்று அண்ணா தொடங்கும்போதே. பெருமழை பொழியத் தொடங்கியது. மழை நிற்கும் என்ற அறிகுறியே இல்லாததால் மேற்கொண்டு கூட்டம் நடத்த இயலாமல் கலைய வேண்டியதாயிற்று.

வாழ்வுக்குவேண்டிய மழையை அன்று மக்கள் வைது கொண்டே சென்ற காட்சி, நமது கொள்கை

(4-ம் பக்கம் பார்க்க)

பன்மொழிப் புலவர் பொன்விழாக் குழு

“அண்ணா அவர்களைப் பொருளாளராகக்கொண்ட பன்மொழிப் புலவர் பொன்விழாக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்ற இதுவரை பின்கண்டவர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள்” என்று பொன்விழாக் குழு அமைப்பாளர் தோழர் கண்ணதாசன் அவர்கள் அறிவிக்கிறார்.

1. திரு. பி. டி. இராசன் அவர்கள், மதுரை
2. ,, கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி
3. ,, பி. இரத்தினசாமி பிள்ளை அவர்கள், சேலம்
4. ,, ஏ. வி. இராமன் அவர்கள், சென்னை
5. ,, ஏ. வி. மெய்யப்பன் அவர்கள், சென்னை
6. ,, ஏ. கே. தங்கவேல் அவர்கள், காஞ்சி
7. ,, எஸ். பெருமாள் அவர்கள், வழக்கறிஞர், புதுச்சேரி
8. ,, நா. பாண்டுரேங்கன் அவர்கள், புதுக்கல்லூரி, சென்னை
9. ,, ம. கி. சண்முகம் அவர்கள், தியாகராயர் கல்லூரி முதல்வர், சென்னை
10. ,, அலெக்சாண்டர் ஞானமுத்து அவர்கள், அழகப்பா கல்லூரி முதல்வர், காரைக்குடி
11. திருமதி எஸ். கே. ஜெகதீஸ்வரி அவர்கள், பெங்களூர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நங்கவரம் அக்கிரமம்!

நாட்டினரே காணீர்! நியாயம்தர வாரீர்!

★

2,000

உழவர் குடும்ப உரிமை பறித்து
வயிற்றில் அடிக்கிறார் பண்ணையார்!

★

23—8—57

உழவர்கள் உரிமை பெற

அறப்போர்!

★

இதயமுள்ளோரே!
துணை நிற்பீர்!

—விவசாயிகள் முன்னேற்ற சங்கம்,
குளித்தலை வட்டம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வேலைநிறுத்தம் செய்பவருக்கு எச்சரிக்கை

போலந்து தொழிலாளர்கள்மீது கோமுல்கா சீற்றம்

வார்ஸா, ஆக. 19—

போலந்தில் போக்குவரத்து சாதனங்களில் பணியாற்றும் 10,000 தொழிலாளர்கள் தங்களுக்குத் தரப்படும் ஊதியம் போதுமானதல்ல என்று கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதும், பயங்கர அடக்கு முறையைக் கையாண்டு இராணுவம் தொழிலாளர்களை ஒடுக்கி சாதனங்களைக் கைப்பற்றி ஓட்டிவருவதும் தெரிந்த ஒன்றாகும்.

போலந்தில் போக்குவரத்துச் சாதனங்களை இயக்கிவருபவர்களுக்குத் தரப்படும் ஊதிய மதிப்பு 20 சிகரெட்டுகள் அடங்கிய பெட்டிக்குச் சமமாம். இதைக்கொண்டு எப்படி வாழமுடியும் என்று தொழிலாளர்கள் குமுறி வேலைநிறுத்தம் செய்துள்ளனர். 10,000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ள இந்த வேலைநிறுத்தம் பற்றி போலந்தின் கம்யூனிஸ்டு தலைவர் கோமுல்கா, தொழிலாளர்களை பயமுறுத்திப் பேசியுள்ளார்:—

"தொல்லைகளை உண்டாக்க வேண்டும் என்ற உறுதியுடன் உள்ளவர்களுடனும், கலகத் தலைவர்களுடனும், தொழிலாளர்கள் சேர்ந்து செயலாற்றுவது நாட்டுக்கும், தொழிலாளர்களுக்கும் கேட்டினை உண்டாக்கும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்"

என்று அவர், உழவர் போராட்ட 20-ம் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"அங்கும், இங்கும் விரோத மனப்பான்மை கொண்டவர்களும், தொல்லைபடுத்துவோரும், தொழிலாளர்களைத் தூண்டி கடுமையான வேலைநிறுத்தத்திற்கு முனைந்துள்ளனர். நாட்டின் பொருளாதாரத்தை எடுத்துரைத்து மக்கள் ஆதரவையும் அவர்கள் பெறமுடியாது. இந்த வேலைநிறுத்தத்திற்குப் பெரும் பொறுப்பு டிராம்வே நிர்வாகமே. தங்களால் நிறைவேற்ற முடியாத சிலவற்றை அமுல் நடத்த வாக்குறுதியளித்து, நிறைவேற்ற முடியாமல் தொழிலாளர்களை ஏமாற்றியுள்ளது. உண்மையில் பெருவாரியான ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யவேண்டும் என்று விரும்பவில்லை.

"டிராம்வே தொழிலாளர்களில் 10 சதவிகிதத்தினர் மற்ற தொழிலாளர்களைப் பணிய வைத்து, சாதனங்களை வெளியே ஓட்டிச் செல்லமுடியாமல் தடுத்துவிட்டனர். இந்த 10 சதவிகிதத்தினர் தடுத்திராவிட்டால் வேலைநிறுத்தம் நடக்கிராது"

என்றும் கோமுல்கா தெரிவித்துள்ளார்.

கூடிய விரைவில் போலந்தில் ஒருசிலதுறைகளை சேர்ந்த தொழிலாளர் மட்டுமே ஊதிய உயர்வை எதிர்பார்க்கமுடியும் என்று அரசாங்கக் குறிப்பு வெளியாகியுள்ளதாம்.

அதில், டிராம் ஊழியர்கள், மருத்துவச்சிகள், சிமெண்டுத் தொழிற்சாலையில் வேலை செய்வோர் இணைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

'வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கிடைக்காதநிலையில் மீண்டும் வேலைக்கு செல்வதே போலந்தில் அடிக்கடி வேலைநிறுத்தம் நடைபெறுவதற்குக் காரணம்' என்றும் கோமுல்கா கூறியுள்ளார்.

வால்டேர் அருகே இரயில் விபத்து

நான்கு பேர் மரணம்; 17 பேருக்குக் காயம்

கல்கத்தா, ஆக. 20—

சென்னையிலிருந்து சென்ற ஹௌரா—ஜனதா எக்ஸ்பிரஸ் இரயிலுக்கு விபத்து ஏற்பட்டுள்ளது.

தென் கிழக்கு இரயில்வேயில் பலாசா—பூண்டி இடையே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஜனதா இரயில் ஓடிவந்து கொண்டிருந்த ஒரு கூட்ஸ் வண்டியின் டிராலியுடன் மோதிக் கொண்டு விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில் 6 இரயில்வே ஊழியர்கள் உட்பட 17 பேர் காயமுற்றிருக்கின்றனர். 4 பேர் விபத்தில் இறந்து விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் பலாசா வைத்திய விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, முதல் சிகிச்சை தரப்பட்டு, பிறகு பெர்ஹாம்பூர் வைத்திய விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனராம்.

விபத்து பற்றி விசாரணை நடத்தப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கே.எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகப் பொதுக்கூட்டம்

21—8—57 மாலை 6 மணிக்கு வண்ணை ராபின்சன் பூங்கா திடலில் தோழர் கே. எஸ். எம். இஸ்மாயில் தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். சீவரத்தினம், பி. எஸ். மணி, இராமய்யா ஆகியோர் பேசுவர். டேப் இராதாமாணிக்கம் இன்னிசையுண்டு.

மின்சார விளக்கேற்று விழா

21—8—57 மாலை 6 மணிக்கு சென்னையடுத்த மூலக்கடை கிராம சீர்திருத்த சங்கப் பணிமனைக்கருகில் மின்சார விளக்கேற்றுவிழா தோழர் பி. எம். மனுவேல் தலைமையில் நடைபெறும். தோழர் வி. சுப்பிரமணி விளக்கேற்றத்தைத் துவக்குவார்; திரு. என். வி. நடராசன், டி.பி. எழுமலை எம்.எல்.ஏ., மற்றும் பலர் பேசுவர்.

படாஸ்கர் அறிக்கை: மாநில முதல்வர்கள் கருத்து என்ன?

டெல்லி சர்க்கார் கேட்டிருக்கிறதாம்!

புதுடில்லி, ஆக. 17—

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு குறித்த எச். வி. படாஸ்கர் அறிக்கையின் நகல் சென்னை, ஆந்திர முதல்வர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றும், அவர்களின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது என்றும் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் அவர்கள் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

படாஸ்கர் அறிக்கை ஜூலை கடைசி வாரத்தில் தமக்குக் கிடைத்ததாகவும் பந்த் கூறியிருக்கிறார்.

ஒரு முதன் மந்திரி தமது இடைக்கால பதிலை அனுப்பியிருப்பதாகவும், இரு முதல்வர்களின் கருத்து அறியப்படுவதற்கிடையில் வேறொன்றும் கூறுவதற்கில்லை என்றும் பண்டித பந்த் தகவல் தந்திருக்கிறார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தலைமையில்

"தென்றல்" கலை நிகழ்ச்சி

✶

25—8—57 ஞாயிறு மாலை 6 மணிக்கு

தியாகராயநகர் வாணி மகாலில் நடைபெறும்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின்

சிறப்புச் சொற்பொழிவு

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

புதிய நாடகம்

கண்ணதாசன், S. A. G. சாமி ஆகியோர் நடிக்கும்

ராஜ தண்டனை

ராஜ்-மலர் குழுவினரின் ராணி மனோரமா—நாடகம்

திரை பின்னணிப் பாடக, பாடகியர் பாட்டுக்கள்

சங்கீத டைரக்டர் எஸ். எம். சுப்பையா நாயுடு—வாத்தியக் குழு

டிக்கட் விவரம்: 5, 2, 1. நிறுவனர்: எஸ். வீரய்யா

25—8—57 காலை முதல் வாணி மகாலில் டிக்கட் விற்கப்படும்

கழகக் கூட்டங்கள்

★

சீர்காழி

தேர் வடக்கு வீதியில்
21—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ந. இராமசாமி
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
கோபாலகிருஷ்ணன்

✶

தாராபுரம்

இஸ்லாமியாபேட்டையில்
22—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ப. தண்டபாணி
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
கே. ஏ. கிருஷ்ணசாமி
எஸ். ஏ. குஞ்சு

★★★★★★★★★★★★★★★★★

கடைசி வேண்டுகோள்

குளித்தலையில் மாபெரும் விவசாயிகள் அணிவகுப்பு

★

22—8—57 மாலை 6 மணிக்கு
குளித்தலை திரு. வி. க. திடலில்

மு. கருணாநிதி
தலைமையில்

அண்ணா
பேசுவார்

—திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★

மகத்தான முத்தமிழ் விருந்து!

'திராவிடன்'

11-ம் ஆண்டு துவக்க சிறப்பிதழ்

அண்ணா

பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் — மா. தங்கவேலர்
டி. கே. சீனுவாசன் — மு. சண்முகம்
கவிஞர் வாணிதாசன் — இரா. மதனகோபால்
இரா. இளஞ்சேரன் — நக்கீரன்
பொன்னியின் செல்வன் — என். வி. என்.

மற்றும் சிறந்த எழுத்தாளர்களின் கருத்துப் படையல்!

★

★ டாக்டர் வரதராசலுவைப்பற்றி திரு. வி. க. (தனிச்சுவை)
★ கலையரங்கம்—கூத்தரசன் மடல்!
★ மகிழும் மலாயா—ஓர் அரசியல் விளக்கம்!

★

அழகிய முகப்பு!—சிறந்த அம்சங்கள்!

52 பக்கங்கள் - விலை அணா எட்டு

24—8—57 அன்று வெளிவருகிறது

★

அன்புகூர்ந்து பிரதிகளுக்கு, உள்ளூர் விற்பனையாளரிடம் முன்பணத்துடன் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

கீழ்க்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை.

திருச்சி— திண்டுக்கல் — தருமபுரி

விவரங்களுக்கு: 'திராவிடன்' சென்னை-1.

அண்ணா நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யில், அவர்கள் கொண்டிருந்த பற்றினை எடுத்துக் காட்டுவது போல் இருந்தது.

★

விழுப்புரம்:

திருமணம்

தோழர் ஏழுமலைக்கும் தோழியர் வனரோசாவுக்கும் 12-8-57ல் விழுப்புரத்தில், அண்ணா தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது.

திருந்திய திருமண முறையைப் பற்றிய சிறப்புக்களையும், வைதிக முறையில் செய்து கொள்ளும் திருமணங்களால் சிறப்பு ஒன்றும் வந்துவிடுவதில்லை என்பதனையும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ; என். சீவரத்தினம், மா. கி. தசரதன் ஆகியோர் விளக்கிப் பேசினர்.

பின்னர் அண்ணா அவர்கள் சீர்திருத்தத் திருமணத்தைப் பற்றிய கருத்துரையைக் கூறினார்.

மணமக்களுக்குப் பல வாழ்த்துரைகளும், நூல்களும் மணப் பரிசாக வழங்கப் பெற்றன.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

திருமண நிகழ்ச்சிக்குப் பின் விழுப்புரம் தோழர் சண்முகம் அவர்களின் மகனுக்கு அண்ணா அவர்கள் 'பாண்டியன்' என்ற பெயரைச் சூட்டினார்; அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அப்பாதுரையார் மணிவிழாவிற்கு திரு. வி. க. படிப்பகச் சார்பில் ரூ. 2 தரப்பட்டது.

★

சேந்தனூர்:

விழுப்புரத்தை அடுத்த சேந்தனூர் கிராமத்தில் 12—8—57ல் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் தெய்வநாயகம் தலைமை வகித்தார்.

தலைமையுரைக்குப்பின் தோழர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்துக் கொள்கைளைப் பற்றிப் பேசினார்.

பின்னர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ; அவர்கள், தமக்கு வாக்களித்தமைக்கு நன்றி தெரிவித்தும், அவர்களுடைய குறைகளைக் கூடுமானவரை நீக்கப் பாடுபடுவதாக உறுதி அளித்தும், கழகத்தில் எல்லோரும் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்றும் பேசினார்.

அடுத்துத் தோழர் மா. கி. தசரதன் கழகத்தின் கொள்கைகளை இன்று மக்கள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள் என்றும், கிராமங்களில் பரவிவரும் ஆர்வம் தான் நல்ல பலன் அளிக்கக்கூடியது என்றும் கூறினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கி, வடநாட்டுப் பிடிப்பு நீக்கப்பட்டால்தான் தென்னாடு நன்னிலையில் திகழமுடியும் என்பதை எடுத்துக்காட்டி, சிலர் அஞ்சுவது போல் தி. மு. கழகம் சாமிக்கு எதிர்க்கட்சி அல்ல என்பதைக் குறிப்பிட்டுப் பேசினார்.

தோழர் சீதாராமன் நன்றி நவின்றபின் கூட்டம் முடிவுற்றது.

துணைப்பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஆகஸ்டு

21: மூலக்கடை (மாதவரம்)
22: முரப்பநாடு (நெல்லை)
23: சாத்தூர்
24: திருவையாறு
25: சிக்கல்
26: உதயமார்த்தாண்டபுரம்
27: திருமதுரை
28: சென்னை (சைதை) சி.ஐ.டி. நகர்
30: திருவள்ளூர்—ஈக்காடு
31: சென்னை—5-வது வட்டம்

திருக்குறள் வகுப்பு

21—8—57 மாலை 6-30 மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை மணவழகர் மன்றக் கட்டிடத்தில் (2, முருகேச முதலித் தெரு) புலவர் தனக்கோட்டியவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.